# கொ/இந்துக் கல்லூரி, கொழும்பு – 4
## முதலாந் தவணைப் பரீட்சை – 2016

**தமிழ்மொழியும் இலக்கியமும் I**

**தரம் - 11**

சுட்டெண்:................................ நேரம் : 1 மணி

***1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட நான்கு விடைகளில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளடித்தாளில் புள்ளடி இடுக.***

- தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

1) **கதி இழக்கினும்** கட்டுரை இழக்கிலோம் என்றான் கதி என்பதின் பொருள்

1) நாடு 2) வீடுபேறாகிய நற்கதி
3) வாய்மை 4) நாம் தேடிய செல்வம்

2)பெரிதினிது பேதையார் **கேண்மை** கேண்மை குறிப்பது

1) நட்பு 2) பகை 3) அன்பு 4) கோபம்

3) அது தன்னிடமுள்ள **சூட்சுமத்தை** எல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்துவிடத் தொடங்கியது

சூட்சுமம் என்பதன் பொருள்

1) அமைப்பு 2) இரகசியம் 3) தொடர்பு 4) வியப்புகள்

4) "எள்துணை யானும் இரவாது தான் **ஈதல்**" ஈதல் என்பதன் எதிர்கருத்து

1) கொடை 2) இரத்தல் 3) வழங்குதல் 4) ஏற்றல்

5) நல்லறிஞர்களாய் நன்மைக்குப் **பாதகம்** இல்லாத இனிய கவிகள் புனைபவர்களேயே புலவர்கள்

என்று கூறுவர் பாதகம் என்பதன் எதிர்ப்பொருள்

1) சாதகம் 2) நட்டம் 3) நன்மை 4) இலகு

- பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

6) critism என்ற கலைச்சொல்லின் தமிழ் வடிவம்

1) இலக்கியப்படைப்பு 2) கவித்துவம் 3) இலட்சியம் 4) திறனாய்வு

7) போர்த்துக்கேய மொழிச்சொல்லாக வரக்கூடியது

1) கச்சேரி 2) அச்சாறு 3) சிப்பந்தி 4) துட்டு

8) பேரிலக்கியமாக கொள்ளக்கூடியது

1) பெருங்காப்பியம் 2) பிரபந்தம் 3) பிள்ளைத்தமிழ் 4) உலா

9) நெல்லுக்கு மணி போல ஆமணக்கின் வித்து

1) முத்து 2) சோறு 3) வித்து 4) மணி

10) கிழக்குக் கிளைமொழிக்கு உதாரணமாக கொள்ளக்கூடியது

1) ஆப்பம் 2) அப்புறம் 3) மறுகா 4) செத்தை

11)தனிநபர் தொடர்பான விழா அல்லாதது

1) மணிவிழா 2) பாராட்டுவிழா 3) கால்கோள்விழா 4) நினைவுவிழா

12) ஒரு புலவன்/கவிஞன் இயற்கை நிகழ்ச்சி ஒன்றின் மீது தனது கருத்தை ஏற்றிக் கூறுதல்

1) தற்குறிப்பேற்ற அணி 2) சிலேடை அணி

3) உயர்வு நவிற்சி அணி 4) இழிவுநவிற்சி அணி

13) பின்வருவனவற்றுள் காரணச் சிறப்புப் பெயர்

1) மரம் 2) நாற்காலி 3) மரங்கொத்தி 4) சுறா மீன்

14) உயிர்த்தொடர் குற்றியலுகரமாக அமைவது

1) பயறு 2) பேச்சு 3) பஞ்சு 4) காடு

15) பின்வருவனவற்றுள் பொருளால் வேறுபட்டு நிற்கும் சொல்

1) சொல் 2) மொழி 3) பதம் 4) இனம்

16) உயிர் துறக்கும் துணிவுடன் வட திசை நோக்கி உண்ணாதிருத்தல்

1) உண்ணாவிரதம் 2) வடக்கிருத்தல்

3) அகிம்சைப் போராட்டம் 4) சத்தியாக்கிரகம்

17) ”ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு“இதில் வந்துள்ள வினைத்தொகை

1) கொக்கு 2) உறு மீன் 3) ஓடு மீன் 4) வாடி

18) கப்பல் செலுத்துவோன் மீகாமன் விமானம் செலுத்துவோன்.

1) சாரதி 2) வலவன் 3)விமானி 4) விமான ஓட்டி

19) இனிப் பொறுக்கமாட்டேன் என்பது.

1) விளித்தொடர் 2) வினைமுற்றுத்தொடர்
3) பெயரெச்சத்தொடர் 4) இடைச்சொற்றொடர்

20) இந்தப் பணியை மூன்று நாளில் முடிக்கலாம் இதில் வந்துள்ள வேற்றுமை

1) நான்காம் வேற்றுமை 2) ஏழாம் வேற்றுமை
3) மூன்றாம் வேற்றுமை 4) இரண்டாம் வேற்றுமை

21) கார்குழல் வழக்குரைத்தாள் இது எவ்வகை அன்மொழித்தொகை

1)வேற்றுமைத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை
2)வினைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை
3) உவமைத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை
4) பண்புத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை

22) இயல்புப் புணர்ச்சியாக கொள்ளக்கூடியது

1) தேன்+அருவி 2) வெளி+களம் 3) கல்+சிலை 4) பூ+கொடி

23) உழைத்து பொருள் தேடாது செலவு செய்தால் எந்தப் பெருஞ் செல்வமும் தீர்ந்து போகும் என்ற கருத்தைத் தரும் பழமொழி

1) ஏறும்பூரக் கற்குழியும் 2) உண்ணாச்சொத்து மண்ணாய்ப் போகும்
3)குந்தித் தின்றால் குன்றும் மாளும் 4)அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

24) ககரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்

1) கடல் 2) கப்பல் 3) கதவு 4) சுகம்

25) " சுதந்திர இந்தியாவே எனது நோக்கம்" என காந்தியடிகள் கூறினார் இதில் வந்துள்ள

தலைமைத் தொடர்

1) காந்தியடிகள் கூறினார் 2) சுதந்திர இந்தியாவே எனது நோக்கம்

3) எனது நோக்கம் 4) சுதந்திர இந்தியா

26) மூர்க்கனும் முதலையும் கொண்ட்து விடா இதில் வ்ந்துள்ள வழுவமைதி

1) எண் வழுவமைதி 2) பால் வழுவமைதி

3) இட வழுவமைதி 4) திணை வழுவமைதி

27) பின்வருவனவற்றுள் உயர்திணைப் பெயர்கள் யாவை?

அ) போராட்டம் ஆ) சாவு இ) தலைவி ஈ) சுகாதார அமைச்சர்

1) அ,ஈ 2) ஆ,இ 3) இ,ஈ 4) ஆ,ஈ

28) பன்மை உருபு பெற்று அமையத்தக்க சொல்

1) யாழ்ப்பாணம் 2) நகரம் 3) நட்பு 4) தண்ணீர்

29) நூறு ஆண்டுகளை குறிப்பது

1) தசாப்தம் 2) சதாப்தம் 3) சகாப்தம் 4) சகஸ்ரம்

30) நிலத்தில் உரிமை கொண்டாடுவதற்க்குச் சான்றாக எழுத்துருவில் அமைந்த பத்திரம்

1) உயில் 2) உரிமை பத்திரம் 3) ஆவணம் 4) எழுத்துரு

*பந்திகளை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக

31) **கலை இலக்கியங்கள் எவ்வளவுக்கு முக்கியத்துவம் பெறுகின்றன ஆயினும் தமிழில் கலை இலக்கியங்கள் வள்ர்ந்த அளவோடு ஒப்பிடுகையில் விமரிசனக் கலை போதியளவு வளர்ச்சி பெறவில்லை என்ற குறை நிலவி வருவதை அவதானிக்கலாம் விமரிசனம் குறித்து பல நூல்கள் வெளிவந்தபோதும் அது பற்றிய போதுமான புரிதலின்மை இன்னமும் உள்ளது.**

*மேற்படி பந்தியில் ஆசிரியர் வலியுறுத்த விரும்புவது

1) விமரிசனம் பற்றிய புரிதலின்மை

2) விமரிசனம் இலக்கியங்களுக்கு அவசியமில்லை

3) இலக்கியங்களுக்கு விமரிசனம் அவசியம்

4) இலக்கியங்கள் வளர்ந்தளவுக்கு விமர்சனக்கலை வளரவில்லை.

32) **விளம்பரம் குறித்த பொருளை வாங்கத் தூண்டுவது, என்ற குறிக்கோள் உடையதாயினும் பொது**

**அறங்களை மீறிவிடாத வகையில் அமைவதை உத்தரவாதப்படுத்த வேண்டும்.பொதுவான விற்பனைக்குரியது என அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்தையும் விளம்பரப்படுத்த முடியாது." புகைத்தல் மதுப்பாவனை'' என்பன உயிருக்கு கேடு என்ற வாசகங்கங்கள் காணப்படுகின்றன. விளம்பரம் ஒவ்வொன்றிலும் சமூக அக்கறை கவனிப்பைப் பெற வேண்டும்.**

*மேற்படி பந்தியின் ஆசிரியருக்கு உடன்பாடில்லாத கருத்து.

1) விளம்பரம் ஒவ்வொன்றிலும் சமூக அக்கறை இருக்க வேண்டும்

2) விற்பனைக்குரியதென அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்தையும் விளம்பரபடுத்த முடியும்

3) விளம்பரம் பொது அறங்களை மீறிவிடாத வகையில் அமைதல் வேண்டும்

4) புகைத்தல் மதுபானம் தொடர்பாக உயிருக்கு கேடு என்ற வாசகம் பொறிக்கப்படவேண்டும்

*வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியை தெரிவுசெய்க

33) நீ உதவி செய்வாய் என்று நான் எதிர்பார்த்தேன் ஆனால் நீ எனக்கு ............................

1) உதவி செய்தாய் 2) உதவ முன்வரவில்லை

3) உதவி செய்வாய் 4) உதவினாய்

34) மாணவருக்கு கல்வியை விட பணிவு, அன்பு, ஊக்கம், முயற்சி முதலான உயர்குணங்கள்

1) முக்கியமானதாகும் 2) முக்கியத்துவம் வாய்ந்த தாகும்

3) முக்கியத்துவமுள்ளது 4) முக்கியமானவையாகும்

*புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமானதை தெரிவு செய்க

35) இன்று நாடு எதிர்கொள்ளும் அரசியல் சவால்கள் குறித்து நல்லாட்சி அரசாங்கம்

பிரச்சினைகளை தீர்ப்பதற்காக வருங்காலதில்---------------நடவடிக்கைகள் தொடர்பாகத் தீவிரமாக ஆராய வேண்டும்

1) மேற்கொள்ளும்
2) மேற்கொள்ளப்பட வேண்டிய
3) மேற்கொண்டு
4) மேற்கொண்ட

36) கணக்காளர் வருடார்ந்த கணக்கறிக்கையை சபையில் சமர்ப்பித்த வேளையில்

அவரின் கணக்கில் காணப்பட்ட பல ---------------- அம்பலமாகின

1) அரை குறைகள்
2) குற்றம் குறைகள்
3) தில்லுமுல்லுகள்
4) தட்டு முட்டுகள்

37) அவனுக்கு தொழில்வாய்ப்பு கிடைக்கவில்லை----------------முயற்சியை கைவிடவில்லை

1) ஆனால்
2) ஆகையால்
3) ஏனெனில்
4) ஆயினும்

38) ஒருபொருளுக்கு ஒப்பாக எடுத்துச் சொல்லப்படும் மற்றொரு சொல்------------ எனப்படும்

1) உருவகம்
2) உவமேயம்
3) உவமானம்
4) சிலேடை

39) *எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தை தெரிவு செய்க

1) மொழியின் வலர்ச்சி நமது வாழ்க்கை வலர்ச்சியை பொறுத்தது
2) மொழியின் வளர்ச்சி நமது வாழ்க்கை வளர்ச்சியை பொறுத்தது
3) மொளியின் வழ்ர்ச்சி நமது வாழ்க்கை வள்ர்ச்சியை பொறுத்தது
4) மொழியின் வள்ர்ச்சி நமது வாழ்க்கை வள்ர்ச்சியை பொருத்தது.

40) * கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன அவற்றை ஒழுங்குபெற வைத்தால்

கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும்.

அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையை தெரிவு செய்க

அ) ஆனால் அவருக்கு தமிழ்மேல் இருந்த அன்பு வேறெங்கோ இழுத்த்து

ஆ) சிலப்பதிகாரத்திலேயுள்ள அரங்கேற்று காதையையே ஆராய்ந்தார்

இ) அடிகளார் தாம் கற்றறிந்த விஞ்ஞானப் பெரும் புலமையைக் கொண்டும் கணித அறிவைக் கொண்டும் பெரும் பெரும் ஆராய்ச்சிகளைச் செய்து ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கலாம்

ஈ) தமிழ்மொழியிலும் தமிழ்ப் பண்பாட்டிலும் அவர் தமது கருத்தைச் செலுத்தினார்

உ) அதற்குள்ள அரும்பத உரையையும் அடியார்க்கு நல்லார் உரையையும் கற்று ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

1) உ,அ,இ,ஈ ஆ 2) இ,அ,ஈ,ஆ,உ 3) இ,ஈ,அ,ஆ,உ 4) ஈ,அ,ஆ,உ,இ

The National e-learning Portal for The General Education